காஞ்சி
ஆசிரியர்: அண்ணாதுரை
விலை
20
காசு

தும்பைப்பூ

எஸ். எஸ். தென்னரசு

> இது முன்னுரை மட்டுமல்ல, தனிக் கட்டுரையுமாகும் 'தும்பைப்பூ'வைத் தொடர்ந்து படிப்போர் இதை முன்னுரையாகவும், மற்றவர்கள் கட்டுரையாகவும் கொள்ளலாம்.

1961–திருப்பரங்குன்றம் தி.மு.க. மாநில மாநாடு முடிந்த மறுநாள், மாநாட்டுக்கு வந்திருந்த மக்கள் தங்கள் தங்கள் ஊர்களுக்கு அலை அலையாகச் சிறுகச்சிறுகக் கலைந்து கொண்டிருந்தார்கள். மாநாட்டுக்கு வந்திருந்த எனது நண்பர் ஒருவர் என்னிடம் வந்து, 'வைகை அணைக்குப் போய் வருவோம் வாருங்கள்' என்றார்.

"வருகிறேன்; ஆனால் ஒரு நிபந்தனை. இரவே மதுரைக்குத் திரும்பி விடவேண்டும்'' என்றேன் நான்.

"என்னிடம் கார் இருக்கிறது; இரவு பத்துமணிக்குள் வந்துவிடலாம்'' என்றார் அவர்.

பகல் மூன்று மணி அளவில் நாங்கள் புறப்பட்டோம்.

மதுரைக்கும் வைகை அணைக்கும் இடையில் நாற்பது மைல் தூரம்தான். ஒரே மூச்சில் போனால் ஒருமணி நேரத்தில் போய்விடலாம். ஆனால் நாங்கள் அப்படிப் போகவில்லை. வழியில்—உசிலம்பட்டியில் நண்பர்கள் இருவரின் உபசரிப்பில் சிற்றுண்டி அருந்திவிட்டு, பின் பயணத்தைத் தொடங்கினோம். ஐந்துமணி அளவில்தான் நாங்கள் அணைக்குப்போய்ச் சேர முடிந்தது.

நண்பர் அவர்களுக்கு வைகை அணை தண்ணீர்பட்டபாடு. பல முறை அவர் குடும்பத்தோடு அங்கே போயிருக்கிறார். வளமிக்க குடும்பத்தைச் சேர்ந்த அவருக்கு பழத்தோட்டங்கள் பல இருக்கின்றன.

வைகை அணை-எனக்கு அது தான் முதல்முறை. அணையும் அதன் சுற்றுப்புறமும் பார்ப்பதற்கு குளிர்ச்சியாகவும், அனுபவிப்பதற்கு இனிமையாகவும் இருந்தன.

நாங்கள் அணைக்கட்டை நெருங்கிவிட்டோம். புடவைக் கரையைப்போல் நெளி நெளியாகக் கட்டப்பட்டிருந்த படிக்கட்டுகளின் வழியாக அணையின் மேல் தளத்திற்குப் போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து கீழே பார்க்கையில், சங்க காலத்து இலவந்திச் சோலையில் தான் இருக்கிறோமா என்றமனமயக்கம் கண்டது எனக்கு. மலர்ச்சோலைகளின் வனப்பும், வண்ணச்சர விளக்குகளின் வசீகரமும், புகழ் பெற்ற மன்னனின் புரவிக்கூட்டத்தைப்போல் திமுதிமுவென்று பாய்ந்து வரும் தண்ணீர்ப் பெருக்கும் காண்போர் உள்ளத்தை காந்தம்போல் இழுத்தன.

கீழே இறங்கினோம். இறங்கியதும் பூங்காவின் வாசல் வந்தது. பூங்காவினுள் பல இடங்களில் சிமிட்டியாலான வர்ணப் பதுமைகள் தொழிலாளர்களின் வியர்வைத் துளிகளின் சின்னங்களாக விளங்கின.

விவசாயி ஒருவன் நெல் தூற்று வதுபோல்,

போலீஸ்காரன் ஒருவன் போக்கு வரத்துக்குக் கைகாட்டுவதுபோல்,

தாயும் மகளுமாக இருவர் மாறி மாறி நெல் குத்துவதுபோல்,

இப்படிப் பல வடிவங்களில் அந்தப் பதுமைகள் தோற்றமளித்தன.

"உங்களுக்கு எது பிடித்திருக்கிறது?" என்று கேட்டார் நண்பர்.

"தாயும மகளும்!" என்றேன்.

"எதனுல்?" என்று கேட்டார் அவர்.

"அதில்தான் இயற்கை நயம் மிகுந்திருக்கிறது" என்றேன்.

"உண்மைதான்! இந்தப் பதுமையைச் செய்த தொழிலாளிக்கு அந்தத் தாயையும் மகளையும் நன்ருகத் தெரியும்; பார்த்திருக்கிருன். அதனுல்தான் அவனது வேலைப்பாட்டில் உயிர் இருக்கிறது" என்ருர்.

"நான் ஊருக்கெல்லாம் கதை சொல்லுகிறேன், நீங்கள் எனக்கே கதை சொல்லத் தொடங்கிவிட்டீர்களே!" என்று கேலி செய்தேன்.

"இல்லை நண்பரே, இந்த அணைக் கட்டில் ஒரு அற்புதமான கதை நடந்திருக்கிறது. நான் முன்பே கேள்விப்பட்டிருக்கிறேன். அதன் குறிப்பை நான் சொல்லுகிறேன் வழக்கம்போல் நீங்கள் மூக்கும், விழியும் வைத்து உயிர் கொடுங்கள்" என்ருர் நண்பர்.

"தொழிலாளர்கள் ஏன் இந்தப் பெண்களை இங்கே பதுமையாக வடித்து வைத்திருக்கிருர்கள்?"— நான் கேட்டேன்.

"இந்த அணை கட்டப்படும் பொழுது தொழிலாளர் அனைவருக்கும் தேனீர்கொடுத்தவளாம் இந்தப் பெண்," என்ருர் நண்பர்.

நண்பர் கதையைச் சுருக்கமாகச் சொன்னுர். கதையில்வந்த இரண்டு சம்பவங்கள் என்னைப் பெரிதும் கவர்ந்துவிட்டன. ஆனுல் அதை உடனடியாக உருவாக்கத்தான் எனக்குப் போதிய சூழ்நிலைகள் அமையவில்லை. இப்போது அந்தக் கதையை எழுதவேண்டிய அவசியமும், எழுதித்தான் ஆகவேண்டும் என்ற தாகமும் ஒருசேர என்னைக் கிளப்பி உட்காரவைத்து விட்டன.

அது என்ன அந்த அவசியம், ாகம்? — என்று கேட்கிறீர்களா? ன்னுடைய தாகத்திற்கு அரசியல் தான் மூல காரணம். தி.மு கழகத்திலுள்ள இலக்கியப் பணியாளர்களுக்கு இப்போதெல்லாம்போதிய நேரம்கிடைப்பதில்லை. பொதுக் கூட்டங்களின் மூலம் மக்களைச்சந்திப்பதற்கும், அரசியல் ஆட்சிமன்றக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்குமே அவர்களுக்கு நேரம் சரியாகிவிடுகிறது. இதைப் பயன்படுத்திக்கொண்டுசில 'பிரத்தியட்சச்சிந்தனையாளர்கள்' எழுத்துலகில் தி. மு. க. அஸ்தமித்து விட்டது என்று களியாட்டம் போடுவதைக் கேட்டு சில காங்கிரஸ் தலைவர்கள் புளகாங்கிதமடைந்து வருகிருர்கள். கேட்டு மகிழ்ந்ததோடுமட்டுமல்லாமல் அவர்களை நேரில் கண்டு முதுகைத் தடவிக்கொடுக்கவும் தொடங்கி இருக்கிருர்கள். முதுகைத் தடவினுல் தலை கனக்கும் என்பது மூத்தோர் வாக்கு. இது தெரியாமல்முதுகைக் கொடுத்துவிட்டார்கள் இந்த எழுத்தாளர்கள்!

எழுத்தாளனின் கடமை, பலவீனமான இதயம்படைத்த பெண்களை மட்டும் அறிமுகப்படுத்துவதல்ல. சூருவளிக்கும் சுருமீன்களின் அமர்க்களத்திற்கும், இடையில் அலைமோதித் தவிக்கும் வத்தையைப்போல்கொடுமைகளுக்கும் சோதனைகளுக்கும் ஆளாகிப் புகழ்பெறும் பெண்களையும் எழுத்தாளன் உருவாக்கி நாட்டில் நடைபயில வைக்க வேண்டும். பெண்களில் பலவகையினர் உண்டு. கோட்டை போன்ற மாளிகைக் குள்சபலபுத்தியுடைய



(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 1 20—6—65 இதழ் 45

அரும்பு மலர

இடையருது நடைபெறும் பெரும் பயணம் வாழ்க்கை. சிலர் வருவார்; சிலர் போவார், சிலர் இருப்பார். வருவார், இருப்பார் போவார். போவார் என்ன ஆவரோ? தெரியாது! இருப்பார், போவார் ஆவதற்கு முன் வாழும் வாழ்க்கை ஒவ்வொரு உயிரினத்திலும் ஒவ்வொரு வகையாக இருக்கும். ஈயும் எறும்பும் வாழும் வாழ்க்கை வேறு; ஆடும் மாடும் வாழும் வாழ்க்கை வேறு; புலியும் சிங்கமும் வாழும் வாழ்க்கை வேறு; மனிதன் வாழும் வாழ்க்கை வேறு. ஆனால் எல்லா வகை வாழ்க்கையிலும் அடிப்படை ஒற்றுமை ஒன்று இருக்கிறது. அது என்ன? இனம் பெருக்கல் என்பதே அது. ஈயும் எறும்பும் தாம் சாவதற்கு முன் வேறுபல ஈக்களையும் எறும்புகளையும் தோற்றுவிக்கின்றன; ஆடும் மாடும் அப்படியே; சிங்கமும் புலியும் மனிதனும் இதற்கு விலக்கு அல்ல. அவ்வளவு ஏன்? புல்லும் பூடும்கூட வேறு புல்லும் பூடும் தோன்றக் காரணமாகின்றன. இப்படி வழிவழியாக வருவதாலேயே உலகத்தில் உயிரினங்கள் தோன்றித் தழைக்கின்றன, பல்கிப் பெருகுகின்றன.

ஆயின், இந்த வகையில் மனிதன் எப்படிப் பெரியவன் ஆகிருன் என்ருல், தன் இனத்தைப் பெருக்குவதோடு மனிதனுடைய கடமை முடிந்துவிடவில்லை. கொட்டையை உண்டாக்குவதோடு மாமரத்தின் கடமை முடிந்துவிடுகின்றது. முட்டையிட்டு அதனைக் குஞ்சு ஆக்குவதோடு ஈயின் கடமை முடிகின்றது. குட்டிபோட்டுச் சில நாட்களுக்குப் பால் கொடுப்பதோடு சிங்கத்தின் கடமை முடிந்துவிடுகின்றது. ஆனல் மனிதனுடைய நிலை அப்படி அல்ல. பெறுவதோடு நிற்காமல், பெற்ற மகவைப் பேணி வளர்ப்பதும் மனிதனுக்கு உற்ற கடமை ஆகிறது. முளை தோன்றும் வரை தேவையான உணவு கொட்டையில் இருக்கிறது. இறக்கை பலப்பட்டு ஈ பறக்கத் தொடங்குகின்றது. கால்களுக்குப் பலம் வந்துவிட்டால் சிங்கத்தின் குட்டிக்குத் தன்னிச்சையான வாழ்வு தொடங்கிவிடுகின்றது. மனிதன் பெறும் மகவோ, பல ஆண்டுகள் வரை பெற்ருேரின், பெரியவர்களின் கவனிப்பிலும் கண்காணிப்பிலும் இருக்கவேண்டியதாகின்றது.

காரணம், கண்ணும் காதும் வளரும் வளர்ச்சி போதும் பிற உயிர்களுக்கு. ஆனல் மனிதனுக்கோ கண்ணும் காதும் பெறும் வளர்ச்சிக்கும் மேலாக மூளையின் வளர்ச்சியும் தேவைப்படுகின்றது. அந்த வளர்ச்சியால்தான் உலகத்தில் மனிதன் தலைமை ஏற்க முடிகின்றது. இல்லையேல் மனிதனைவிட ஆற்றல் மிக்க விலங்குகள் இல்லையா, தலைமைக்கு? மூளையின் வளர்ச்சியால், வல்லமையால் மனிதன் பெரியவன் ஆகின்ருன். எனவேதான் மற்ற உயிர் இனங்களைவிட மனிதன் நெடுநாட்களுக்குத் தன் குழந்தைகளைப் பேணி வளர்க்க வேண்டியவன் ஆகின்ருன்.

இன்றைய நாகரிக நாடுகளில், வளர்ந்தோரிடம் காட்டும் அக்கறையைவிட, இளைஞர்களிடம் காட்டும் அக்கறையே மிகுந்திருக்கிறது. அதுவே முறையும் ஆகும் என்கின்றனர். ஏனெனில் சிறுவர் என்று இன்று இருப்போரே நாளை பெரியோர் ஆவர். நாளை அவர்களுடையது. அரும்புகளே மலர்கள் ஆகின்றன. மலர்கள் சருகுகள் ஆகுமேயன்றி அரும்புகள் ஆகா. எனவே மலரில் காட்டும் நாட்டத்தைவிட அரும்புகளிடம் காட்டும் நாட்டமே மிக்க பலனுடையது.

ஆனல், நம்முடைய நாட்டின் சிறுவர் நிலை பற்றி எண்ணும்போது ஏக்கமே மிகுகின்றது நாடாள வந்திருக்கும் நாயகர்கள் தங்களுக்கே ஆட்சியின் திறம் உள்ளது என்கின்றனர். தங்களையன்றி வேறு யாருக்கும் ஆளத் தெரியாது என்கின்றனர். ஆளும் நிலையையும், அதனல் விளைந்துள்ள கேடுகளையும் எண்ணிப் பார்க்கும்போது நெஞ்சம் திகில் கொள்கிறது. இவர்கள் ஆட்சியால் நாட்டின் நிலை என்ன ஆகுமோ என்று கவலை மிகுகின்றது.

நாளை நாட்டின் தூண்களாக வேண்டிய சிறுவர் சிறுமியரில் ஒன்றரைக் கோடி பேர் இன்று கல்வியற்று, வளர்ச்சியற்றுத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ருர்கள். துள்ளித் திரியும் பருவம், பள்ளிக்குச் சென்றிட வேண்டிய நிலையினர் ஆனல் இன்று அவர்கள் வயிற்றுப் பசியைப் போக்கிக் கொள்வதற்காக வேலைகளில் ஈடுபட்டிருக்கின்ருர்கள். இந்தியப் பேரரசின் தலைமைப் பதிவாளர் (ரிஜிஸ்ட்ரார் ஜெனரல்) அவர்கள் தரும் தகவல் இது: இந்தியாவில் உள்ள தொழிலாளர்களில் 7·5 சதவிகிதத்தினர் 15 வயதுக்கு உட்பட்டவர்கள். ஒன்றரைக் கோடி சிறுவர் சிறுமியர் தொழில்களில் உள்ளனர் என்பதாகும்.

தொழில் செய்வது இழுக்கு என்று நாம் கூறவில்லை. கல்வி கற்கும் பருவத்தினர், கல்வி கற்பதை விட்டுக் கடும் உழப்பை நாடியிருக்கின்றனரே என்றுதான் வேதனைப்படுகின்ருேம். இந்தக் கொடுமைக்கான காரணத்தை வேறு யார்மீதும் போட முடியாது. இது எதிர்க்கட்சிக்காரர்களின் தூண்டுதலால் ஏற்பட்ட விளைவு என்று வாதத்திற்காகக்கூட சொல்ல முடியாது. எந்த எதிர்க்கட்சியும் கல்வி வேண்டாம் என்று கூறுவது இல்லை. அன்னிய ஆட்சியால் ஏற்பட்ட கேடு இது என்றும் கூறித் தப்பித்துக்கொள்ள முடியாது. 15-வயதுக்கு உட்பட்ட குழந்தைகளைத்தான் இந்தக் கணக்கு கூறுகின்றது. நாடு விடுதலை பெற்று பதினேழு ஆண்டுகள் ஆகின்றன. சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு பிறந்த குழந்தைகளில், காங்கிரசார் ஆட்சியில் பிறந்த குழந்தைகளில், ஒன்றரைக் கோடி குழந்தைகள் தொழிலாளிகள் ஆகியுள்ளன. என்ன சொல்லப் போகிருர்கள் காங்கிரஸ்காரர்கள்? எமது ஆட்சியில் தான் இத்தனை முன்னேற்றம் என்று மார்தட்டுகிருர்களே, இதற்கு என்ன சொல்வது?

உலகத்தில் உள்ள வேறு நாகரிக நாடுகளில், நடைபெறும் நல்லாட்சிகளில் இந்த நிலைமை இல்லை. ஆனல் இங்கே, இந்த நிலைமை! நல்ல உள்ளம் கொண்டவர்கள், சான்ருேர்கள் இதனையறிந்து வேதனைப் படவேண்டும். வேதனை, நல்லாட்சி மலருவதற்கான சாதனை ஆகவேண்டும்.

ஆகுமாயின் அரும்புகள் மலரும்; வாடி உதிர்ந்துவிடா,

கனடா பயணம் (2)

ஏங்கோ நெடுந்தொலேவிலே நடப்பதுபற்றி நாம் ஏன் கவலேப்படவேண்டும், அதுபற்றி ஏன் இவ்வளவு விரிவாக எழுதவேண்டும் என்று எண்ணி எங்கே சலித்துக்கொள்ளுகிருயோ என்ற சந்தேகத்தால்தான், சென்ற கிழமையே முழுத் தகவலேயும் கூருதிருந்தேன்.

ஒன்று கூற விரும்புகிறேன், ஆதிக்க மனப்பான்மையும் அதன் விளேவாக ஏற்பட்டு விடும் அடிமைத்தனமும், அது வேதனேயாக வளர்ந்த பிறகு எழுகிற குமுறல், கிளர்ச்சி, புரட்சி ஆகியவையும் எவ்வளவு நெடுந்தொலேவிலே நடந்தாலும், நாம் அக்கறை காட்டியாக வேண்டும், ஏனெனில் அவைகளின் வகை மாறுபட்டிருக்கலாமேயொழிய, அடிப்படை எங்கும் ஒரேவிதமானதாகத்தான் இருக்கும். சில இடத்திலே இனம், சில இடத்திலே மதம், இன்னும் சில இடத்திலே மொழி, பற்பல இடத்திலே பணம் என்பவை ஆதிககத்துக்கான கருவிகளாக உள்ளன. கருவியின் வகை வேணடுமானுல் ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் விதமாக இருக்குமே யொழிய, ஆதிக்கமுறை, நோக்கம், போக்கு, விளேவு இவை எங்கும் கொடுமை தருவனவாகவே அமையும். எவ்வளவு நெடுந்தொலேவிலே நடைபெறும் ஆதிக்கமாக இருப்பினும், அதனே ஆராய்ந்து பார்ப்பதிலே நிச்சயம் பயன் கிடைக்கும்; அதனுல்தான் கனடா நாட்டு நிகழ்ச்சி பற்றி சிறிதளவு விரிவாகவே விளக்க விரும்பினேன்.

பசி! பசி! பசி! என்று எப்போதும் இதே பல்லவிதானு என்று பணம் படைத்தவர் கேட்கிருர் அல்லவா, தன்னிடம் பாடுபட்டும பராரியாகக் கிடப்பவனேப் பார்த்து, அதுபோல, ஆதிக்கத்தினுல் தாக்குண்டு தத்தளிக்கும் நிலேமையில் இல்லாதவர்களும், மற்றவர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாக உள்ளவர்களும், வேதனேப் படுகிறவர்களிடம் ஒரு புன்னகையை உதிர்த்தபடி பேசுகிருர்கள்; இது என்ன குறுகிய மனப்பான்மை! என் மொழி! உன் மொழி! என்ற சிறுபிள்ளேத்தனமான பேச்சு! மொழி ஆதிக்கம், மொழி ஏகாதிபத்தியம் என்ற பேச்சு! சேச்சே! எல்லோரும் மனிதர்கள்! அனேவருககும் சொந்தம் இந்த உலகம்! இதிலே இனம், மதம், மொழி என்ற அற்பக் காரணங்களுக்காகப் பிளவுபட்டு நிற்பதா! பேதம் மூட்டிக்கொள்வதா!! என்று கேட்கிருர்கள். நான் அப்படியொன்றும் மேலே விழுந்து கடித்துக் குதறிச் சதையைப் பிய்த்துத் தின்றிடவில்லேயே, இலேசாகப் பல்லால் தீணடினேன், பாவிப்பயல் இதற்கே சுருண்டு கீழே விழுந்து செத்துத் தொலேத்தானே! என்று நல்லபாம்பு கூறுவதில்லே: ஆனுல் சில நல்லவர்கள் கூறுகிருர்கள, என்ன கெடுதல் செய்துவிட்டோம் உஙகளுக்கு, எலலோருக்கும் பொதுவாக ஒரு மொழி இருககட்டும் என்கிறோம, வேறு என்ன சொல்லுகிறோம்; அந்த மொழி ஏற்கனவே பலர் பேசும மொழியாக இருப்பதால் அதனேப் பொதுமொழி என்று ஏற்கச்சொல்கிறோம, இதுவா கொடுமை! இதுவா அநீதி! இதற்கா இததனே எதிர்ப்பு, எரிச்சல், கிளர்ச்சி!!—என்றெல்லாம்.

கனடாவின் அரசியல் சட்டதிட்டத்தை வகுத்தவர்கள் இதுபோல வாதாடவில்லே. கனடாவில் உளளவர்களில் பெரும்பானமையினர் ஆஙகில மொழி பேசுபவர்கள், ஆகவே கனடா நாடு முழுவதற்குமாக ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருக்கவேணடும் என்று விதி வகுத்திடவில்லே; மாருக மிகநோ்ததியான அரசியல் நுணணறிவுடன், சிறுபான்மையோரின மொழி என்ருலும், அவர்கள் அம்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பதால், அவர்கள்



மீது வேறு மொழியை ஆட்சிமொழியாகத் திணிக்கக் கூடாது என்று உணர்ந்து ஆங்கிலம், பிரன்ச்சு எனும் இருமொழிகளையும் ஆட்சி மொழிகள் என்ற திட்டம் மேற்கொண்டனர்.

இரு மொழிகளை ஆட்சி மொழிகளாகக் கொண்டதனுல், எதிர்பாராத சிக்கல் பல ஏற்பட்டு, நிர்வாகம் சீர்குலைந்துபோய், புதிய ஆபத்து ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. இரு ஆட்சிமொழிகள் திட்டம் நடைமுறைச் சிக்க லின்றி அமுலில் இருந்து வருகிறது. என்ரு லும் இப்போது க்யூபெக் அரசு போர்க்கொடி உயர்த்தியிருக்கிறது. அதற்குக் காரணம் இரு ஆட்சிமொழிகள் கொண்டிருப்பதால் ஏற்பட்ட குழப்பம் அல்ல. ஆங்கில மொழி யினர், பிரன்ச்சு மொழியினரின் மொழியைத் தாழ் நிலைக்குத் தள்ளிவிடவில்லை; சட்டம் இடம்கொடுக்கவில்லை; ஆனுல் மற்றத்துறை களில், பிரன்ச்சு மொழியினரான க்யூபெக் மக்களைத் தாழ்த்திவிட்டுள்ளனர்.

இரண்டு கருத்துகளைப் பெறுகிறேன் தம்பி! நான் இந்தத் தகவலை ஆராய்வதில். ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் ஆட்சி மொழிகளாக இருப்பது முடியாது, சிக்கலும், குழப்பமும் ஏற்படும் என்று அச்சப்படத் தேவையில்லை; கனடாவில் இரு ஆட்சி மொழிகள் இயங்கி வருகின்றன; அதனுல் சிக்கலோ, குழப்பமோ மூண்டுவிடவில்லை. இரண்டாவது ஆதிக்கம் செலுத்து வதில் சுவை காண்பவர்கள், அதற்கு ஒரு கருவி பயன் படாமற் போய்விட்டால் வேறு கருவியைத் தேடிப் பெற்றுக் கொள்கிருர்கள்.

மொழி மூலம் தமது ஆதிக்கத்தைப் புகுத்துவது முடியாது என்பதனை உணர்ந்த ஆங்கில மொழி பேசுவோர், பிரன்ச்சு மொழி பேசுவோரைத் தாழ்த்தி அவர்கள்மீது ஆதிக்கம் செலுத்த மத்திய அரசு அமைப்பிலே தமக்குள்ள மெஜாரடி பலத்தைக் கருவியாக்கிக் கொண்டனர். இதனை எதிர்த்து நிற்கிறது க்யுபெக். கருவி எதுவாக இருந்தால் என்ன, ஆதிக்கம் ஆதிக்கந் தானே! ஆதிக்கத்தை எதிர்த்து நிற்கிறது—பொரு ளாதாரத் துறையில், அரசியல் அரங்கில், தொழில் துறையில், ஆங்கிலர் பெற்றுள்ள ஆதிக்கத்தை எதிர்க்கிறது.

இந்த எதிர்ப்பு வலுப்பெற்ற நிலையில், க்யுபெக் மக்கள், தங்கள் பிரன்ச்சு மொழி, பிரன்ச்சு கலாசாரம் ஆகியவற்றினைப் பாது காத்துக் கொள்ளவும், வளர்ச்சி பெறச் செய்யவும் தக்கவிதமான அரசியல் அமைப்பு தமக்குத் தேவை என்று கேட்டுக் கிளர்ச்சி செய்கின்றனர்.

1867-லேயே, இரு மொழிகளும் ஆட்சி மொழிகள் என்று சட்டம் வகுத்து, அதனைச் செயல்படுத்தி வந்தனுல், இப்போதைய மாச்சரியம், மொழிப் பிரச்சினையின் அடிப்படையிலே இல்லை.

ஆனுல் இந்தியப் பேரரசோ, மொழியிலிருந்தே ஆதிக்க அரசைத் தொடங்கவேண்டும் என்று திட்டமிடுகிறது.

மொழி விஷயத்திலே மாச்சரியம் எழவிடாதபடி தடுத்த பிறகும்கூட, வேறு முறைகளிலும் துறைகளிலும் ஆதிக்கத்தைப் புகுத்திட ஆங்கிலர் முனைகின்ற போது, எதிர்ப்புக் கிளம்புகிறது கனடாவில்! இங்கோ, மொழியிலிருந்து ஆதிக்கத்தைத் தொடங்குகிருர்கள்; ஏன் என்று கேட்பவர்களைக் கண்டிக்கிருர்கள்; பல் வேறு வகையில் அடக்கி ஒடுக்கப் பார்க்கிருர்கள்.

ஆதிக்கம் இருக்கிறதே தம்பி! அது மிக விந்தை யானது. ஆதிக்கத்திலே சிக்கிச் சீரழிவோர் போக, அடிமைத்தனத்தைத் தாங்கித் தாங்கி உணர்ச்சி யற்றுப் போனவர் போக, மீதமுள்ளவர்கள், ஏன் நாம் அடிமைப்படுத்தப் பட்டோம்? எந்தக் கருவி கொண்டு நம்மை அடிமைப்படுத்திஞர்கள்? என்று எண்ணிப் பார்க்கத் தொடங்கி, நாம் யார்? நம்முடைய இயல்பு என்ன? மரபு என்ன? என்பன பற்றிச் சிந்திக்கத் தொடங்கி, நம்முடையன யாவை? என்று ஆராய்ந்து கண்டறிந்து, அவைகளைப் பேணி வளர்த்திடவும், அவற்றிலே பெருமை காணவும் முற்படுகின்றனர். ஆதிக்கம் துவக்கத்திலே தொல்லையையும் துயரத்தையும் தருகிறது. இறுதியில், நம்மை நாம் உணர்ந்து கொள்ளும் நல்லுணர்ச்சியை, உள்ளுணர்ச்சியைத் தருகிறது. எழுச்சி பிறக்கிறது!!

இந்த நிலை ஒவ்வோரிடத்தில் ஏற்பட ஒவ்வோர் விதமான முறை தேவைப்படலாம்; ஆனுல் இந்த நிலையை இன்று பல்வேறு இடத்திலே, ஆதிக்கக் கரத்தில் சிககிக் கிடந்தவர்கள் பெற்று வருகின்றனர்.

ஆப்பிரிக்கக் கண்டத்தில் ஏற்பட்டு விட்டிருக்கிற எழுச்சியை இருபது ஆண்டுகளுக்கு முன்பு எவரும் எதிர்பார்த்துக்கூட இருக்கமாட்டார்கள். ஆனுல் இன்று விழிப்பால் விடுதலை பெற்ற 'கறுப்பர்' நாடுகள், ஐக்கிய நாடுகள் மன்றத்தின் முடிவுகளை உருவாக்கக் கூடிய செல்வாக்கினைப் பெற்றுவிட்டிருக்கின்றன.

இந்த நிகழ்ச்சிகளையும் அவை தரும் பாடங்களையும் நன்கு உணர்ந்திருப்பதால், கனடா அரசாங்கம்; க்யுபெக்கில் கிளம்பியுள்ள எதிர்ப்பைஅடக்க எத்தனை படை ஏவலாம்; எத்தனை சிறைகளை நிரப்பலாம்; எத்தகைய பயங்கரச் சட்டம் போடலாம், என்று திட்டமிடா மல், என்ன குறை? ஏன் இந்தக் குமுறல்? என்ன வேண்டும் உங்களுக்கு? என்று கனிவுடன் கேட்கவும், அக்கறையுடன் அதற்காவன செய்திட முற்படவும் முனைந்திருக்கிறது.

இங்கே எக்காளம் எழுப்புகிருர்களே, இருக்கும் இடம் அதற்கு வசதி செய்து தருகிறது என்ற ஒரே காரணத்தால்; விடமாட்டோம்! பிடித்தடைப்போம்!

சுட்டுத் தள்ளுவோம்!! ஒழித்துக் கட்டுவோம் என்றெல்லாம், அந்த முறையில் அல்ல, அனுபவம் மிக்க, அறிவாற்றல் கொண்ட ஒரு அரசு எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ அந்த முறையிலே நடந்து கொள்ள கனடப் பேரரசு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. அங்குதான் லால்பகதூர் உலா வருகிறுர் என்பதால், இதுபற்றி அறிந்துகொள்வார் என்ற நம்பிக்கையுடன் இதனை எழுதுகிறேன்.

எதிர்ப்பு தெரிவிக்கலாம், ஆனால் முறையாக, கட்டுக்கு உட்பட்டதாக, அந்த எதிர்ப்பு இருக்கவேண்டும் என்று இங்கே பேசுகிறுர்கள், பெரியவர்கள். தம்பி! க்யுபெக்கிலே தோன்றியுள்ள எதிர்ப்பு எந்த அளவுக்குச் சென்றது தெரியுமா! பிரிட்டிஷ் பேரரசியார் கனடா சென்றபோது, இங்கு வராதீர்! உயிருக்கே ஆபத்து உண்டாகும்!! என்று அவர்களை மிரட்டும் அளவுக்கு! அந்த மிரட்டலையோ, முறையையோ நான் சரி என்று கூறவில்லை. எனக்குப் பிடிக்காத முறை அது; நமது கழகம் வெறுத்தொதுக்கிடும் முறை அது. ஆனுல் க்யுபெக் மக்கள் அந்த முறையிலே தமது எதிர்ப்பைக் காட்டினர்; அங்கு எந்தக் கருணாநிதியையும் பாளையங் கோட்டைக்கு அனுப்பியதாகத் தெரியவில்லை; எந்த இலக்குவனுர் மீதும் பாதுகாப்புச் சட்டம் பாயவில்லை. மாருக, இந்த மனக்குறையை வளரவிடக் கூடாது, க்யுபெக் மக்களைச் சாந்திப்படுத்த வேண்டும், சமாதானம் கூறவேண்டும் என்ற பெருநோக்குடன்,

மொழி

பண்பாடு

பொதுநிலை

ஆகியவை குறித்து எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்ந்துபார்த்து, கனடா உடைபட்டுப்போகாமலிருக்கத்தக்க வழி வகைகளைக் கூறும்படி, கனடா அரசு ஒரு நிபுணர்கள் குழுவை அமைத்தது — மத்தியப் பிரதேசத்திலிருந்து போலீசையும், மற்ற இடத்திலிருந்து பட்டாளத்தையும் அழைத்தார்களே, அகிம்சையின் அடிப்படையில் அரசு அமைத்துக் கொண்டுள்ள அறநெறி மறவாத அண்ணல்கள், அவர்கள் அறிந்துகொள்வதற்காகக் கூறுகிறேன், குமுறி எழுந்து க்யுபெக் கிளர்ச்சி செய்யக்கண்ட கனடா அரசு சீறிப்பாயவில்லை, மாருக கமிஷன் அமைத்து, கிளர்ச்சி எழக் காரணம் என்ன என்று கண்டறிகிறது. அது ஜனநாயகம்!!

ஆண்ட்ரிலாரண்டாவ், என்பவரும். **டேவிட்சன்டன்டன்** என்பவரும், இந்தக் கமிஷனுக்குக் கூட்டுத் தலைவர்கள்.

இந்தக் குழுவில் 10-பேர் உறுப்பினர்கள்.

1963 ஜுலை மாதம் முதற்கொண்டு இந்தக்குழு பணியாற்றி, இப்போது, கருத்தளித்திருக்கிறது.

பிரச்சினையைத் தீர்த்துவைக்க என்னென்ன வழிகள் என்று கமிஷன் கூறவில்லை. பிரச்சினை என்ன என்பதனை விளக்கி இருக்கிறது.

இந்தியப் பேரரசு, பிரச்சினை இருப்பதாகவே இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை என்பதைத் தம்பி! இந்த நேரத்தில் நினைவுபடுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

கனடாவில், பிரச்சினை இருக்கிறது, அதனை அடக்குமுறையினுல் ஒழித்துவிடமுடியாது, கூடாது, தேவையில்லை என்ற நுண்ணறிவு அரசோச்சுகிறது! இங்கு? என்று கேட்கிருயா தம்பி! இது என்ன கேள்வி! இங்கு பக்தவத்சலம் அரசாள்கிருர்—காமராஜரின் ஆசீர்வாதபலத்துடன்!!

212-பக்கங்கள்கொண்ட ஒரு அறிக்கையை அந்தக்குழு வெளியிட்டிருக்கிறது; அந்த அறிக்கை எனக்குக் கிடைக்கவில்லை; அதனுடைய சுருக்கம் மட்டும் கிடைத்தது; அதிலேயே குழு எத்தனை அக்கறையுடன் பிரச்சினையை ஆராய்ந்திருக்கிறது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

> மிகப் பெரிய வகையான மாறுதல்களைக் காலத்திற்கேற்பச் செய்தாலொழிய நிலைமை பலர் எதிர்பார்ப்பதைவிட விரைவில் மோசமாகிப்போய்விடும்,

என்று குழு எச்சரித்திருக்கிறது.

இந்தி ஆட்சிமொழி ஆகலாமா என்பதுபற்றி அறிந்துகொள்ள இங்கு அமைக்கப்பட்ட மொழிப் பிரச்சினைபற்றிய ஆய்வுக்குழுவில் அறிவாளர்கள் பலர்—சிலர் காங்கிரசார் — எச்சரித்திருந்தனர், இந்தியை ஆட்சிமொழியாக்குவதால் ஆபத்தான நிலைமை மூண்டுவிடும், நிர்வாகம் சீர்குலைந்துவிடும், ஓரவஞ்சனை தலைவிரித்தாடும், மொழி ஏகாதிபத்யம் கொக்கரிக்கும், இந்திய ஒற்றுமை குலைந்துபோகும் என்றெல்லாம். இங்

திருவள்ளுவன்

(எழுதியது - சோ. சதாசிவம்)

விலை ரூ. 6-00.

சென்ற இரண்டாயிர மாண்டுகளாகத் தமிழ்ப் பேரறிஞன் திருவள்ளுவனைப்பற்றி இது போன்ற ஆராய்ச்சி நூலொன்று வெளிவந்ததேயில்லை !

ஆம், அவ்வளவு சிறந்த நூல் !!

விற்பனையாளர்களுக்குக் கழிவு 25 சதம்.

முன்பணத்துடன் எழுதுக :-

இன்பவாழ்வுப் பதிப்பகம்,

கோயம்புத்தூர் - 2.

தியப் பேரரசும் அதன் நடுநாயகர்களும் இந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தவில்லை. பிரச்சினை சிக்கலற்றது; வேண்டுமென்றே சிலர் இதுபற்றி எதிர்ப்பு காட்டுகிருர்கள்; நாடு பிரச்சினையை ஒப்புக்கொண்டுவிட்டது என்று பேரரசினர் வாதாடி வருகின்றனர்.

மொழிப் பிரச்சினை குறித்து இங்கு இந்தியப் பேரரசினர் ஒரு தவருன கருத்தை விடாப்பிடியாக வற்புறுத்திக்கொண்டிருக்கிருர்கள். இந்திமொழி பேசுவோர் மிகப் பெரிய அளவினராக — மெஜாரடியாக—உள்ளனர்; மற்றமொழி பேசுவோர் சிறுபான்மையினராக உள்ளனர்; ஒரு நாடு ஆட்சிமொழியாக, பெரும்பான்மையினரின் மொழியைத்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும்; அதுதான் ஜனநாயகமுறை; சிறுபான்மையோரின் மொழி அழியாதிருக்கப் பாதுகாப்பு கேட்டுப் பெறலாம், ஆனல் பெரும்பான்மையினரின் மொழியைத்தான் ஆட்சி மொழியாகக்கொள்ளவேண்டும் என்று கூறுகின்றனர்.

இந்தவாதம் ஜனநாயகப் பண்புக்கு உகந்தது அல்ல என்பதை 1867-லேயே கனடாஅரசு உணர்ந்து சிறுபான்மையோரின் மொழியான பிரன்ச்சு மொழியையும் ஆட்சிமொழி என்று சட்டமூலம் அறிவித்தது.

நடைமுறையில், ஆங்கில மொழி பேசும் கனடியர்கள், பல்வேறு துறைகளிலும் தமது ஆதிக்கத்தைப் புகுத்தி, பிரன்ச்சு மொழி பேசும் கனடியர்களை ஆத்திரம் கொண்டிடச்செய்துவிட்டனர். புதிய பிரச்சினையும் புகைச்சலும் பகையும் கிளம்பிவிட்டிருப்பதற்கு இதுதான் காரணம்.

நாம் அனைவரும் கனடியர்கள் அல்லவா! என்ற பேச்சு, அழகானது; பொது எதிரியைச் சந்திக்க வேண்டிய நேரத்தில், அந்தப் பேச்சு எழுச்சியூட்டக் கூடியது. ஆனல் ஒரு பகுதியினர் மற்ருேர் பகுதியினர் மீது ஆதிக்கம் செலுத்திக்கொண்டு, அந்த ஆதிக்கத்தை எதிர்க்கும் மக்களிடம், நாம் அனைவரும் கனடியர்கள் அல்லவா? என்று பேசும்போது, எழுச்சிஎப்படி ஏற்படும்? எரிச்சல் அல்லவா உண்டாகும்!!

க்யுபெக்கில் மிகப் பெரும்பான்மையினர் பிரன்ச்சு மொழியினர்; அவர்களுக்கும் பிரான்சுக்கும் மொழி தவிற வேறு எந்தவிதமான பந்தமும் பாசமும் இல்லை. கனடா அரசியலில் க்யுபெக் தனது பங்கினைச் செலுத்திவந்தது; பிரான்சுநாட்டு நடவடிக்கைகளிலே க்யுபெக் எந்தவிதமான பங்கும்கொள்ளவில்லை.

இவ்விதமாக க்யுபெக் இருந்துவந்தபோதிலும், கனடாவில்உள்ள ஆங்கிலமொழி பேசுபவர், இங்கிலாந்துநாட்டு நடவடிக்கைகளிலே அக்கறைகாட்டவும், சொந்தம் கொண்டாடவும் தவறவில்லை. அதேபோது, எமதுமொழி, எமது பண்பாடு, எமது பாரம்பரியம் என்று க்யுபெக் மக்களும், கனடாவில் இதரபகுதிகளில் உள்ள பிரன்ச்சு மொழி பேசுபவர்களும் பேசிட முன் வந்தபோது, "இது என்ன குறுகிய மனப்பான்மை! நாம் அனைவரும் கனடியர் அல்லவா!! என்ற பழய பல்லவியைப் பாடிவந்தது.

ஆதிக்கம் செலுத்துபவர் நாம் அனைவரும் கனடியர் அல்லவா என்று பேசி, :சொந்தம்கொண்டாடியது, க்யுபெக் மக்களுக்குக் கோபத்தைத்தான் கிளறிவிட்டது, அவர்கள் சீறி எழுந்து, "நாங்கள் கனடியர்கள் அல்ல! பிரன்ச்சுக்காரர்கள்! எமது நாடு தனி!" பண்பாடு தனி!" என்று பேசத்தலைப்பட்டனர்.

கனடா ஒரே அரசு என்று சட்டம் ஏற்பட்ட நாளிலிருந்து, அதற்கு உட்பட்டு இருந்துவந்த க்யுபெக் இப்போது அந்த 'ஓரரசு' ஏற்பாட்டினையே உடைத்துவிடப்பார்க்கிறது, இதுமிகப் பெரிய ஆபத்து என்று (கமிஷன்) குழுவினர் தெரிவித்துள்ளனர்.

பிளவு மனப்பான்மை தோன்றிவிட்டது கண்டிக்கத் தக்கது என்று கூறுவதோடு அந்தக் குழு தன் வேலை முடிந்துவிட்டதாகக் கருதவில்லை. மாருக க்யுபெக் மக்களிடம் இந்த எண்ணம் எழுந்ததற்குக் காரணம், ஆங்கில மொழியினர் மேற்கொண்டுள்ள போக்குதான் என்று கண்டிக்கத் தயங்கவில்லை.

கனடா ஆங்கில மொழியினரின் நாடு; அதிலே பிரன்ச்சு மொழி பேசுவோர் சிறுபான்மையினர் என்று ஓர் கருத்து நிலவுகிறது. இது மிகத்தவருன கருத்து. கனடா, ஆங்கிலமொழி பேசுவோர், பிரன்ச்சு மொழி பேசுவோர் எனும் இரு சமூகங்களுக்கும் சொந்தமான நாடு; இதிலே பெருவாரியாக உள்ளவர்கள் என்ற காரணம் காட்டி, 'எஜமானர்'களாகப் பார்த்திடும் ஆங்கில மொழியினரின் போக்கு, நியாயமுமல்ல, உண்மை ஜனநாயகமுமாகாது என்று குழு குறிப்பிட்டு, இப்போது க்யுபெக் மக்கள் கேட்பது, சலுகை அல்ல; உரிமையைக் கேட்கிருர்கள்; கனடா ஒரே நாடாக எதிர்காலத்தில் இருக்கவேண்டுமானல். இந்த இரு சமூகங்களும் சரிசமமான நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கத்தக்க விதமான ஏற்பாட்டினை விரைவில் மேற்கொண்டாக வேண்டும் என்றும் குழு குறிப்பிட்டிருக்கிறது.

யார் பேசுவது நியாயம்? பிரன்ச்சு மொழி பேசுவோர் கூறுவது நியாயமா? ஆங்கில மொழியினர் கூறுவது நியாயமா? இரண்டிலே எது நியாயம்? என்பது அல்ல பிரச்சினை. இறுவேறு 'நியாயங்கள்' உள்ளன; இவை இரண்டும் நியாயங்களே! இவை இரண்டும் ஒன்ருேடொன்று முட்டி மோதிக்கொள்ளாமல் இணைந்து இருக்க வழி கண்டுபிடித்தாகவேண்டும் என்று அந்தக் குழு கூறுகிறது.

தம்பி! இங்கு இந்தியை ஆட்சிமொழியாக ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்பதற்கு இந்தி ஆதரவாளர் கூறிடும் காரணம், இந்தியாவில் மிகப் பெரும்பாலோர் பேசும் மொழி இந்தி என்பதாகும்.

மிகப் பெரும்பாலோர் இந்தி பேசுகின்றனர் என்ற வாதமே தவறு; அந்தக் கணக்கே தவறு என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியிலேயே பல்வேறுவகையான இந்தி உண்டு. ஒரு இந்திக்காரர் பேசுவது மற்ருேர் இந்திக்காரருக்குப் புரியாது என்பதை, மறுத்திட முடியாது இந்தி ஆதர வாளர்களால்.

தம்பி! இந்தியிலே என்னென்ன வகை உண்டு என்பது பற்றி நாவலர் பேசுவது என் காதிலே ஒலித்த படி இருக்கிறது,

இந்திதான் பொது ஆட்சி மொழி ஆகவேண்டும் என்று வாதாடுபவர்கள், இதற்கு எந்தவிதமான சமா தானமும் கூற முயற்சிப்பதுகூட இல்லை.

மைதிலி என்ற மொழி தனிமொழி என்று வாதாடு கிருர்கள் விற்பன்னர்கள்; அந்த மொழி பேசுவோர் களின் எண்ணிக்கையையும் சேர்த்துக்கொண்டு, இத்தனை கோடி பேர் இந்தி பேசுகிருர்கள் என்று இந்தி ஆதிக்கக்காரர் கணக்குக் காட்டுகிருர்கள். மைதிலி தனிமொழி, அதையும் இந்தி என்று கூறிடுவது சரி யல்ல என்று மைதிலி மொழிப் புலவர்கள் கூறு கின்றனர்.

மைதிலி மொழிக்காக என்று தனிவகுப்பு அமைக் கப்பட்டிருக்கிறதாக அறிகிறேன்; டில்லி பல்கலைக் கழகத்தில்.

கலாசாரக் கழகம் எனும் அமைப்பை இந்தியப் பேரரசு நிறுவி, ஒவ்வொரு மொழியிலும் வெளியிடப் படும் சிறந்த கருத்தோவியத்துக்குப் பரிசு தருகிறது, இந்தத் திட்டத்தின்படி. மராத்தி, குஜராத்தி, தமிழ், இந்தி என்று பல மொழிகளுக்குப் பரிசு இருக்கிறது.

மைதிலி, இந்தி அல்ல; அது ஒரு தனி மொழி என்பதை ஒப்புக்கொள்ளும் முறையில் இந்தியப் பேரரசு, இந்தி, வங்காளி, மராத்தி போன்ற மொழி களுக்குப் பரிசு வழங்குவது போல, மைதிலிக்கும் தனியாகப் பரிசு வழங்கும் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கிறது.

இந்தி, மிகப் பெரும்பான்மையினர் பேசும் மொழி என்ற வாதமே தவறு; கணக்கே தவறு.

இந்தியே மிகப் பெரும்பான்மையினர் பேசும் மொழி என்பது உண்மை என்று வைத்துக்கொண் டால்கூட, மிகப் பெரும்பான்மையினர் பேசுவது என் பதற்காக மற்ற மொழியினர் மீது அந்த மொழி ஆதிக் கம் செலுத்துவது அறமாகாது; அறிவுடமையாகாது என்ற தீர்ப்பு அளிப்பார்கள், கனடாவில் அமைக்கப் பட்ட ஆய்வுக்குழுபோல ஓர் தகுதிமிக்க குழு இங்கு அமைக்கப்பட்டால்.

தம்பி! இப்போது இங்கே சொல்லுகிருர்கள் அல்லவா, வடக்கே உள்ளவர்கள் ஏதாவது ஒரு தெற் கத்தி மொழியைப் படித்துக்கொள்ள விரும்புகிருர்கள், முன்வந்துள்ளனர் என்று; அதுபோல, எதிர்ப்பும் எரிச் சலும் வளர்ந்துவிட்டிருப்பது கண்டு. ஆங்கில மொழி பேசுவோர், இனித் தங்கள் பிள்ளைகளுக்குப் பிரன்ச்சு மொழியைக் கற்பிக்கப்போவதாகவும், பிரன்ச்சு மொழிக்கான பள்ளிக்கூடங்களைத் தமது பகுதியில் இனி அமைக்கப் போவதாகவும் பேசுகின்றனர்.

இதைக் கேட்டு க்யுபெக் மக்கள் புளகாங்கிதம் அடைந்துவிடவில்லை. இது மயக்கும் பேச்சு, பயன் இல்லை என்று கூறுகின்றனர்.

க்யுபெக்கில் உள்ள மக்களில் 100க்கு 98 பேருக்கு ஆங்கிலம் தெரியாது; அங்கு அன்ருட நடவடிக்கை கள் அனைத்தும் பிரன்ச்சு மொழியில்.

ஆனல் க்யுபெக்கில் வணிகக் கோட்டங்களையும் தொழிற்கூடங்களையும் அமைத்துக்கொண்டுள்ள ஆங்கில மொழியினர், தமது அலுவலக நடவடிக்கை கள் அனைத்தையும் ஆங்கில மொழியிலேயே அமைத் துக் கொண்டுள்ளனர்.

க்யுபெக் மக்கள் அந்த அலுவலகங்களில் பணி புரியும்போது. 'அன்னியர்' போன்ற ஒரு உணர்ச்சி தன்னலே ஏற்பட்டுவிடுகிறது. நாம் அனைவரும் கனடி யர் அல்லவா!!—என்று பேசுவது, அந்தச் சமயத்தில் எவ்வளவு பெரிய கேலிக்கூத்தாக இருக்கும் என்பதை எண்ணிப் பார்த்துக்கொள்ளேன்.

அதிசயம்! ஆனல் உண்மை!

படுகொலை செய்யப்பட்ட பஞ்சாப் முன் ளுள் முதலமைச்சர், பிரதாப் சிங் கைரான், ஒரு சமயம் மிலிடரி ஓட்டல் நடத்திக் கொண்டிருந்தார்.

❋

அமைச்சர் சுப்பிரமணியத்துக்கு ஆட்டுப் பால் மிகவும் பிடிக்கும்; டில்லியில் தமது வீட் டில் இதற்காக ஆடு வளர்க்கிருர்-

❋

கண் ஆபரேஷன் செய்யும் டாக்டரின், திறமைக் குறைவின் காரணமாக, கண் கெட் டுப் போய்விட்டால், அந்த டாக்டரின் கண் களைக் குத்திக் குருடாக்கிவிட வேண்டும் என்று பாபிலோனியாவில் ஒரு சட்டம் இருந்தது.

❋

இப்போது ஒருவரை ஒருவர் கண்டித்துக் கொள்ளும் நாசரும் துனீசிய முதலமைச்சர் **போர்க்யூபாவும்** சில திங்களுக்கு முன்பு தமக்குள்ள நட்பைக் காட்டிக்கொள்ள ஒரு வரவேற்பின்போது ஒருவரை ஒருவர் கட்டித் தழுவி முத்தமிட்டுக் கொண்டார்கள்.

❋

சீனு அணுகுண்டு தயாரிப்பதற்குத் துணை செய்தவர்களில் முக்கியமானவர் விஞ் ஞானப் பட்டப் படிப்பும் பயிற்சியும் பெற்ற ஒரு அமெரிக்க மாதுதானும்!

❋

கலகம் செய்யும் நாகர்கள் நடமாடும் பகுதியில் போய்வர இந்தியப் பேரரசின் உயர்தர அதிகாரிகள், நாகநாட்டு புரட்சி சர்க்காரிடம் **'பாஸ்போர்ட்'** பெற்ருர்களாம் —தலை தப்ப!

அந்த அலுவலகங்களில் பெரும்பாலான நட வடிக்கை ஆங்கில மொழியிலேயே நடத்தப்படுவதால், ஆங்கில மொழி பேசுவோரே, பெரிய இடங்களில் அதி காரிகளாக முடிகிறது. க்யுபெக் மக்கள் 'எடுபிடி' வேலை மட்டுமே பார்க்க முடிகிறது.

க்யுபெக் நமது நாடு; இங்குத் தொழில் நடத்திப் பெற்றிடும் செல்வம் நம்முடையது; ஆனால் இங்கு நமக்கு 'எடுபிடி' வேலை!! இது அக்ரமம்! சொந்த நாட்டிலேயே நாம் அடிமைகளாக்கப்பட்டிருக்கிறோம்! இந்த அக்ரமத்தை எப்படிச் சகித்துக்கொள்வது; ஏன் சகித்துக்கொள்ள வேண்டும் என்று க்யுபெக்கில் எழுச்சிபெற்ற மக்கள் கேட்கின்றனர். அந்தக் கேள்வி கோபத்தை மூட்டவில்லை கனடா அரசுக்கு, சிந்தனையைக் கிளறிவிட்டிருக்கிறது.

இந்திதான் ஆட்சி மொழி என்ற நிலை வந்தே தீரும் என்ற பேச்சு வலுவடைய வலுவடைய, டில்லி போன்ற வடநாட்டுப் பெருநகர்களில், அரசாங்க அலுவலகங்களிலே மட்டுமல்ல, தனியார் துறையில் உள்ள அமைப்புகளில், வணிகக் கோட்டங்களில், மிகப் பெரும்பாலான நடவடிக்கைகளை இந்தியிலேயே நடத்த முற்பட்டுவிட்டனர். ஆங்கிலம் தெரிந்தவர்கள்கூட இந்தியிலேயே பேசுவது, இந்தியிலேயே அலுவலகக் குறிப்புகளைத் தயாரிப்பது என்ற முறையில் மும்முரமாகிவிட்டனர்.

படிப்பில், பயிற்சியில், செயல் திறமையில் தகுதி மிக்கவர்களாக உள்ள தென்னகத்தார், அத்தகைய அலுவலகங்களில், இந்திப் படை எடுப்பின் காரணமாக இப்போது இடர்ப்படுகின்றனர்.

இங்கே தரப்படுவதில் அரைப்பகுதி கிடைக்கும் என்றாலும், இதை விட்டுவிட்டுத் தமிழ் நாட்டுக்குத் திரும்பி வந்துவிடலாம் என்று பார்க்கிறோம்; இங்கே இனி அதிக நாட்களுக்கு இருக்க முடியாதுபோலிருக்கிறது என்று இப்போதே அவர்கள் குமுறிக் கூறி வருகின்றனர்.

இந்தி மட்டுமே ஆட்சிமொழி; ஆங்கிலம் அறவே அகற்றப்படும் என்ற நிலையில் இன்னும் எவ்வளவு தத்தளிக்க வேண்டி நேரிடும் என்பதை எண்ணிப் பார்க்கும்போதே திகில் மூண்டுவிடுகிறது; நிச்சயமாக.

தம்பி! இருமொழித் திட்டத்தை மேற்கொண்ட நிலையிலேயே மறைமுகமான அநீதி இழைக்கப்படுவதாக, க்யுபெக் மக்கள் கூறி எதிர்க்கிறார்கள்; இங்கோ காமராஜர் துணிந்து கூறுகிறார், போனால் போகட்டும் என்று, ஆங்கிலமும் சிறிது காலம் இருந்துவரட்டும் என்று ஏற்பாடு செய்கிறோம்; ஆனால் ஒன்று மட்டும் இப்போதே கண்டிப்பாகக் கூறிவிடுகிறேன்; இந்த ஆங்கிலம் என்றென்றும் இருந்து வரும் என்று எண்ணிக்கொள்ளாதீர்கள்; இந்தி மட்டுமே ஆட்சி மொழி என்ற நிலை எப்படியும் ஏற்பட்டே தீரும், என்பதாக.

அந்த நிலையில், என்னென்ன விதமான ஆதிக்கம் அநீதி அக்ரமம் நெளியும் என்பதை எண்ணிப் பார்த்திடும் எவர்தான், இன்றிருந்தே இந்தியை எதிர்த்தாக வேண்டும் என்ற உணர்ச்சி கொள்ளாமலிருக்க முடியும்.

அந்த உணர்ச்சி கொந்தளித்துக்கொண்டிருக்கிறது. அச்சமூட்டி அதனை அழித்திட முடியவில்லை; கனிவாகப் பேசி அதனைக் கட்டுப்படுத்த முடியவில்லை; அந்த உணர்ச்சி, கட்சிக் கட்டுகளைக்கூட இடித்துத் தள்ளிக்கொண்டு, பரவிக்கொண்டிருக்கிறது. துரைத்தனம் மேற்கொள்ளும் அடக்குமுறை அந்த உணர்ச்சியை மேலும் மேலும் வளர்த்திடச் செய்து வருகிறது.

ஆனால், தம்பி! அந்தவிதமான உணர்ச்சியைக் கனடா அரசு மதித்து, பரிகாரம் தேடிட முயற்சிப்பது போல இங்கும் இந்தியப் பேரரசு தக்க முறையை மேற்கொள்ள வேண்டுமானால், அந்த உணர்ச்சியை எதற்குப் பயன்படுத்தி, எவ்விதமாகப் பணியாற்றி, வெற்றி பெற்றிட வேண்டும் என்பது பற்றித்தான் இபபோது அனைவரும் தீவிரமாகச் சிந்தித்தாக வேண்டும்.

குழப்பம், கலகம், பலாத்காரம், நாசவேலை என்பவைகள் மூலம்; இந்தி எதிர்ப்புணர்ச்சியை இந்தியப் பேரரசு உணரவேண்டும் என்று எண்ணுவதும், அம்முறையில் செயலாற்றுவதும், நிச்சயமாகப் பயன் தராது, மாறாக இந்தி எதிர்ப்புணர்ச்சியையே அது அழித்தொழித்துவிடும்.

பலாத்காரத்துக்குப் பணிய முடியுமா? சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டாமா? என்று துரைத்தனம் கேட்கும்; பொதுமக்கள் 'ஆம்' என்றுதான் கூறுவார்கள்; இதிலே சந்தேகம் வேண்டாம்.

ஏனெனில், மிகத் தூய்மையான கொள்கைக்காகக்கூட பலாத்காரம்—அவிழ்த்து விடப்பட்டு, அது தன்னுடைய கோர தாண்டவத்தை நடத்திட ஒரு அரசு, அல்லது ஒரு சமூகம் அனுமதித்து விடுமானால், பிறகு அதேவிதமான பலாத்காரத்தை மிக மோசமான காரியத்துக்காக, நச்சு நினைப்பினர் மேற்கொண்டிட முடியும். பிறகு நாடு, காடு ஆவது தவிர வேறு வழியில்லை.

க்யுபெக் கனடாவில் ஒரு பகுதிதான் என்றாலும், இன்று ஒரு கமிஷன் நியமித்து பிரச்சினைக்குப் பரிகாரம் தேடியாக வேண்டும் என்ற அளவுக்குக் கனடப்பேரரசு எதனாலே வந்திருக்கிறது? பலாத்கார நடவடிக்கையினால் அல்ல!

உணர்ச்சியை வகைப்படுத்தி, அந்த உணர்ச்சி கொண்ட சர்க்காரை க்யுபெக்கில் அமைத்ததால்!!

இந்தி எதிர்ப்புணர்ச்சியையும் இந்தியப் பேரரசு மதித்து, இந்தி பேசாதாரின் உரிமைகளை வழங்கிடத் தக்க ஏற்பாட்டினை மேற்கொள்ள வேண்டுமானால்—பலாத்காரத்தால் அல்ல—இந்தி எதிர்ப்புணர்ச்சி கொண்ட சர்க்காரை இங்கு அமைத்துக் காட்டவேண்டும். அது மட்டுமே இந்தியப் பேரரசின் மமதையை மாய்க்கும், பிடிவாதத்தைப் போக்கும், பிரச்சினையைத் தீர்த்துவைக்கும்.

கனடப் பேரரசு கொண்டுள்ள முறையினை அப்ப டியே ஒப்புக்கொள்ளும் அரசு இருந்து வந்தது, க்யு பெக்கில்; முன்பு.

க்யுபெக் மக்கள் மட்டும், ஆங்கில மொழியினரின் ஆதிக்கத்தை எதிர்த்து வந்தனர்; கிளர்ச்சி செயதனர்; வேலை நிறுத்தங்கள்; சச்சரவுகள் நடைபெற்றன.

வேலை நிறுத்தங்களை உடைக்கவும், சச்சரவுகளை அடக்கவும்தான் கனடா பேரரசு முனைந்தது, அந்த நாட்களில்.

பிறகு, தெளிவு பெற்றவர்கள், ஆங்கில மொழி யினரின் ஆதிக்கத்தை எதிர்க்கும் உணர்ச்சி மக்க ளிடம் வெளிவந்தால் மட்டும் போதாது, அந்த உணர்ச் சியின்மீது கட்டப்பட்ட அரசு க்யுபெக்கில் அமைய வேண்டும் என்று திட்டமிட்டுப் பணியாற்றினர்.

அத்தகைய அரசு அமைந்தது க்யுபெக்கில்; இனி இந்தப் பிரச்சினையைப் புறக்கணிக்க முடியாது என்று கனடப் பேரரசு, கைகூப்பிய நிலை பெற்றது.

இப்போது க்யுபெக்கில், மக்களின் எண்ணம் வேறு, அரசின் எண்ணம் வேறு என்பது அல்ல நிலை.

தம்பி! இதனை மறந்திடலாகாது; எத்தனை வலு வுள்ளது என்று நாம்கூறினாலும், இந்தி எதிர்ப்புணர்ச்சி என்பது தமிழ் மக்களிடையில்—அதிலும் தெளிவும் துணிவும் பெற்ற, தன்னலம் மறந்த பகுதியினரிடை யில்—காணப்படுவதே யன்றி, தமிழக அரசுடையது அல்ல.

தமிழக அரசு, இந்தி ஆதரவாளர்களின் முகாம்; இதுகண்டு அருவருப்பு கொண்டிடுவதால் மட்டும் ஆகப்போவது ஒன்றும் இல்லை.

அரசு என்ன அரசு! மக்களின் சக்தியின் முன்பு இந்த அரசு எம்மாத்திரம்! என்று பேசலாம்! சுவையும் சூடும் மிகுந்திருக்கும். ஆனால் உலகம் ஒரு கேள்வி கேட்கும், அதற்குப் பதில்தரமுடியாமல் திணறுவோம்.

அரசினையே துச்சமென்று கருதத்தக்கவிதமாக இந்தி எதிர்ப்பு உணர்ச்சி தமிழக மக்களிடம் இருப்ப தாக வீரம் பேசுகிறாயே ஐயா! அந்த வலிவினைக் கொண்டு, இந்தி எதிர்ப்பு உணர்ச்சிகொண்ட அரசு அமைத்திட ஏன் முடியவில்லை, உம்மால்? என்று கேட் கும்!! அது...அது...என்று இழுத்துப் பேசினால் பயன் இல்லை.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி என்பது மக்களில் ஒரு பகுதியினரின்: உணர்ச்சிமட்டும் அல்ல, தமிழக முழு வதும் ஊடுருவிப் பாய்ந்துள்ள உணர்ச்சி என்பது உண்மை என்றால், அந்த உணர்ச்சிகொண்ட அரசு ஏன் அமைக்கக்கூடாது, தமிழகத்தில்?

கலயங்களிலே வண்ணக் குழம்புகளை நிரப்பிவைத் துக்கொண்டு, தூரிகைகொண்டு, ஓவியம் தீட்டிட வேண்டும். அது ஓவியன் வேலை. வண்ணக்குழம்பினை மனம்போன போககிலே அள்ளித் தெளிப்பது ஓவியக் கலையல்ல.

உணர்ச்சியைப் பயன்படுத்துவதும், தம்பி! ஒப் பற்ற திறமை தேவைப்படும் ஒரு நுண்கலை.

தமிழகத்தில் இன்று காணப்படும் உணர்ச்சி யைத் திறமையுடன் பயன்படுத்தி, இந்தி எதிர்ப் புணர்ச்சியின்மீது கட்டப்பட்ட அரசு காணவேண்டும் தமிழகத்தில்.

இந்தி எதிர்ப்புணர்ச்சியைத் தமிழகத்தில் அரி யணை ஏறச்செய்வதிலே வெற்றி பெறாமல், இந்தியப் பேரரசின் துணையுடனும் தமிழகக் காங்கிரஸ் அரசின் ஒப்புதலுடனும் அரியணை ஏறிடும் இந்தியை எப்படி விரட்டமுடியும்? கேட்கமாட்டார்களா, இந்தியப் பேரர சினர், உன்னுடைய இந்தி எதிர்ப்புணர்ச்சிக்கு உன்னு டைய தமிழகத்திலேயே தரவேண்டிய மதிப்பினை மக் கள் தந்திருந்தால், தமிழக அரசு இந்தி எதிர்ப்பு அர சாக அல்லவா வடிவம்பெற்றிருக்கும்; காணோமே; உன்னுடைய இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை ஒப்புக் கொள்ளும்படி உன்னுடைய மக்களையே உன்பக்கம் கொண்டுவர முடியவில்லை என்றால், நான் உனக்குப் பணியவேண்டுமா! கூரை ஏறிக் கோழிபிடி ஐயா! முத லில்!! பிறகு கோபுரம் ஏறி வைகுந்தத்திற்கு வழி அமைக்கலாம்!! என்றெல்லாம்.

எனவேதான் தம்பி! க்யுபெக் மக்கள், முதலில், தம்வழி நடந்திடும் அரசு அமைப்பதில் வெற்றி கண்ட னர்; அந்த வெற்றியைக் கண்டபிறகு கனடப் பேரரசு, க்யுபெக்கின் கேள்விகளைப் புறக்கணிக்கமுடியவில்லை.

கனடாவின் பிரச்சினை இந்தக் கருத்தினை நாம் பெற்றிடவும் பயன்படுகிறது. ஆனால் தம்பி! இதனை நான் உணர்ந்து என்ன பலன்! நீ உணர்ந்துமட்டும் என்னபலன்! இந்தி எதிர்ப்பு உணர்ச்சிகொண்ட அனை வரும் உணர்ந்து தமிழக அரசினைமாற்றி அமைக்கும், உறுதிகொண்டால்தானே பலன் கிடைக்கும்?

இந்தியைத் தமிழக மக்களிலே ஒரு பகுதியினர் எதிர்க்கிறார்கள்; தமிழக அரசு இந்தியை ஆதரிக்கிறது என்றநிலை இருக்குமட்டும், இந்தியப் பேரரசு இறுமாந்து நிற்கும்; உலக ஜனநாயக நாடுகள்கூட, இந்தியப் பேரரசின் போக்கைக் கண்டிக்கத்தயங்கும்.

ஆனால் தமிழக அரசு இந்தி ஆட்சிமொழியாவதை எதிர்க்கிறது என்ற நிலை பிறந்திடும்போது இந்தியப் பேரரசு, அந்த உணர்ச்சியைப் புறக்கணிக்கத் துணி யாது; துணியுமானால், இந்தியப் பேரரசை ஜனநாயக உலகு கண்டித்திட முனைந்திடும்,

பிரன்ச்சு மொழியினரின் கிளர்ச்சியை இன்று கனடப் பேரரசு மதிததாகவேண்டிய நிலை ஏற்பட்டதன் காரணத்தைக் கருத்துடன் ஆராய்து பார்த்தால், தம்பி! இந்தி எதிர்பபு உணர்ச்சி வெற்றி பெறுவதற் கான வழி அந்த உணர்ச்சிமீது கட்டப்பட்ட அரசு தமிழகத்தில் அமைவதுதான் என்பது புரியும் இதனைப் புரிந்திடச் செய்திடும பணியினைத்தான தமபி! நீ மேற் கொண்டிருக்கிறாய, உன் வெற்றியைப் பொறுத்துத் தான் இருககிறது, நாட்டின் எதிர்காலம்.

அண்ணன்,

அண்ணாதுரை

கேள்வி ? பதில்

(1) பிளவு பல இருந்தும், காங்கிரஸ் கட்சி பற்றிப் பெருமை பேசுகிருர்களே, அது எப்படி இருக்கிறது?

உள்ளே பல பொத்தல்கள் இருந்தாலும், ஒழுங்காக வெளுத்து மடித்துப் போட்டுக் கொள்கிருர்கள் தெரியுமா, விசிறி மடிப்பு — அதுபோல காங்கிரசு கட்சி.

(2) மலேஷியப் பிரதமர் துங்குவைத் தாம் பார்க்க முடியாது என்று டாக்டர் சுகர்ணே கூறிவிட்டாராமே?

ஆமாம்! ஆணவம் காரணமாக அப்படிப் பேசுவதாகச் சொல்வார்கள், ஆனுல் உண்மையான காரணம் அச்சம்! துங்குவைச் சந்தித்தால், அவர் எடுத்துக் காட்டும் நியாயத்தை எப்படி சுகர்ணேவால் மறுக்க முடியும்? சரியான பதில் கூற முடியாமல் திணறவேண்டும்; வெட்கமாக இருக்குமே. அந்த அச்சம் காரணமாகவே சுகர்ணே, துங்குவைப் பார்க்க முடியாது என்று கூறிவிட்டிருக்கிருர்.

(3) இந்தி வந்தால் தமிழ் கெடாது என்று கூறுகிருரே காமராஜர் என்ன சொல்கிறீர்?

நானு! மறைமலே அடிகளும் சோமசுந்தர பாரதியாரும், சேதுப்பிள்ளேயும், கூறிஞர்கள், இந்தி வந்தால் தமிழ் கெடும் என்று. அவர்கள் சொல்லுவதை நாடு நம்பவேண்டுமா, காமராஜர் சொல்லுவதையா!! இது படிப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினே. படிக்காத மேதைகள் கவனிக்கக் கூடிய பிரச்சினே அல்லவே.

(4) கருப்புச் சட்டை போடாதவன் காங்கிரசுக்காரனு என்று கூடப் பெரியார் கேட்பார் போல இருக்கிறதே என்று ஒரு காங்கிரஸ் காரர் கோபித்துக் கொள்கிருரே, அதற்கு என்ன சொல்கிறீர்?

சொல்வது என்ன? ஒட்டு வாங்கிக் கொடுக்க மட்டுந்தானு பெரியார்! புத்திமதியுந்தான் சொல்லுவார். அவருடைய உதவியைக் கேட்டுப் பெறுகிறவர்கள், அவர் சொல்லுவதையுந்தான் கேட்டுக் கொள்ளவேண்டும், நான் அசல் சைவம், மீனே எடுத்து விட்டு, குழம்பு மட்டும் ஊற்று என்று கேட்பதுபோல, பெரியார் ஓட்டு வாங்கிக் கொடுக்க மட்டும் வரட்டும், மற்றதற்கு வேண்டாம் என்று பேசுவது நியாயமா!!

(5) தமிழ் நாட்டிலுள்ள தி. மு. கழகத்துக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லே என்று இலங்கை பெடரல் கட்சித் தலேவர் ஒருவர் கூறியிருக்கிருரே, கவனித்தீரா?

ஓ! கவனித்தேன். நியாயந் தானே! தி. மு. கழகத்துக்கும் பெடரல் கட்சிக்கும் தொடர்பு இருப்பதாகமட்டுமல்ல, இலங்கை மீது படை எடுக்கத் தூண்டுகிற கட்சி தி. மு. க. என்று கூட பண்டாரநாயகா கட்சி பழி சுமத்தி வந்தது. இப்போது தெளிவு தந்திருக்கிருர் திருச்செல்வம் எனும் அமைச்சர். இலங்கையிலுள்ள தமிழ் மொழி வழியினரின் உரிமையிலே தி. மு. கழகத்துக்கு நிரம்ப அக்கறை உண்டு. அவ்வளவுதான். இலங்கை அரசியலில் தலேயிடும் உரிமையைத் தி. மு. கழகம் கேட்கவில்லே.

(6) புதிது புதிதாக முதலாளிகளே உண்டாக்கிக்கொண்டே சமதர்மம் பற்றிப் பேசும் காங்கிரஸ் கட்சியைப்பற்றி என்ன சொல்வது?

சூடான வான்கோழி புலவு தயார் என்ற விளம்பர போர்டு வெளியேயும், உள்வாசற்படியில் ‘அன்பே சிவம்’ என்ற போர்டும் வைத்திருக்கும் ‘மிலிடரி’ ஓட்டல் பற்றி என்ன எண்ணிக்கொள்வோம்! அதுபோலத்தான்.

(7) போரிலே அதிக மக்கள் மடிந்து போகிருர்களா, நோயினுல் அதிகம் பேர் மாண்டு போகிருர்களா?

நோயினுல் மாண்டு போகிறவர்களின் தொகையே அதிகம். ஒரு கணக்கு கிடைத்திருக்கிறது. அமெரிக்காவில் நடந்த உள்நாட்டுப் போரில், 44,238 பேர் இறந்தனர். போர் 1861-லிருந்து 1865-வரை நடந்தது. களத்திலே இறந்தவர்கள் போக, படுகாயப்பட்டுப் பிறகு இறந்தவர்களின் தொகை 49,205 என்று தெரிகிறது. ஆனுல் அதேபோது நோய்வாய்ப்பட்டு இறந்தவர்களின் தொகை, 186,216 என்கிருர்கள்.

(8) மதுவிலக்குத் திட்டம் எமது உயிர் என்று கூறிடும் காங்கிரசாட்சியில், மகாராஷ்டித்தில் பீர் உற்பத்தி செய்யப் போகிருர்களாமே. அநியாயமில்லேயா?

அதனுலென்ன! பீர் என்ற பெயரை, ‘பாரத் பானம்’ என்று மாற்றிவிட்டால் போகிறது என்று சொல்லுவார் புதிதாகக் காங்கிரசில் புகுந்தவர்.

★

3-ம் பக்கத் தொடர்ச்சி

பெண்கள் தலைமறைவாக வாழ்கிறார்கள். அதே நேரத்தில் கூரை வீடுகளில் கோட்டை போன்ற மனம் படைத்த பெண்கள் தும்பைப் பூக்களைப்போல் தூய்மையாக வாழ்க்கை நடத்துகிறார்கள்.

நாம் இங்கே ஒரு பெண்ணை ஊர் அநவல்களை இலட்சியம் செய்யாத ஒரு தாயைச் சந்திக்கப் போகிறோம். அதற்காகவே நெடிய இந்த முன்னுரையை எழுதினேன். இப்படி ஒரு தாயை நாம் இதுவரை சந்தித்திருக்க மாட்டோம் என்பது என் முடிவு. கற்பனையைவிட உண்மை மிகச் சுவையாக இருக்கும் என்பதற்கு இதில் வரும் தாய் ஒரு சாகாத சித்திரம்.

தன்னடக்கமும் சண்ணியமும் கொண்ட தாயுள்ளத்தின் திட்டமிட்ட நடவடிக்கைகள் ஈகையுள்ள மன்னனின் தயாளமான உத்தரவுகளைவிடச் சிறந்த பலன்களைத் தந்துவிடுகின்றன. இது எந்த அளவுக்கு உண்மை என்பதை நாம் பார்க்கப் போகிறோம்.

இனி அணைக்கட்டுக்குப் புறப்படுவோம்......



வைகை அணையின் அடிவாரம்!

'சக்குபாய் டீ ஸ்டால்' — என்ற போர்டு அந்தக் கடையில் தொங்கியது. எத்தனை கடைகள்தான் அந்த வரிசையில் இருந்தாலும் சக்குபாய் டீ ஸ்டாலுக்குத்தான் கிராக்கி அதிகம். எப்போதுமே அங்கு ஒரு கூட்டம் மொய்த்தபடி இருக்கும்.

குருவம்மா—அவள்தான் அந்தக் கடைக்குச் சக்கரவர்த்தினி. அவள் அழகியோ இல்லையோ, அவள் கையால் தேனீர் குடிப்பதற்காகத்தான் அவ்வளவு கூட்டம் அங்கே எப்போதும் தேங்கி நிற்கிறது.

முன் கூடத்திலுள்ள திண்ணையில் கண்ணாடிக் கோப்பைகளும், பித்தளைக் குவளைகளும் படைவீரர்களைப்போல் எப்போதும் அணிவகுத்திருக்கும். ஈரம் படிந்தவரையில் ஒரு கோணித்துணியின் மீது நின்று குருவம்மா டீ அடிப்பாள். காலை ஐந்துமணிக்கு டீ அடிக்கத் தொடங்குபவள். எப்போது தான் நிறுத்துகிறாள் என்று திட்டமாகச் சொல்லமுடியாது. சில நாட்களுக்கு இரவு பத்துமணிவரைகூட அவள் கடை திறந்திருக்கும். அவளுக்கென்ன பத்துக் கைகளா? அவள் பார்க்கும் வேலைகளைக் கொஞ்சம் கவனித்துவிட்டால் இந்தச் சந்தேகம் வரத்தான்செய்யும். டீ அடிக்கிறாள்; பலகாரம் கொடுக்கிறாள்; அதற்குக் காசு வாங்கிப்போடுகிறாள். அடுப்பு விறகைத் தூண்டுகிறாள்; கையோடு கையாக வெற்றிலையும் போட்டுக்கொண்டு சுண்ணாம்பு விரலைத் துடைத்துக்கொள்கிறாள். அடேயப்பா! டீக்கடை பாணியில் கூறினால் இந்த வேலைகள் எல்லாம் குருவம்மாவுக்கு 'ராப்தா' ஆகிவிட்டன. பழக்கமாகிவிட்டால் எந்தக் காரியத்திலும் நடுக்கம் ஏற்படுவதில்லைதான்! முதன்முதல் சைக்கிள் விடும்போது கைகள் ஆடுகின்றன. பழக்கித் தருபவன் தொடையைக் கிள்ளி 'நேராகப்பார்' என்கிறான். படிப்படியாகக் கைநடுக்கம் நின்றுவிடுகிறது. பின்னால் அவனே சர்க்கஸ் கொட்டகையில் மெல்லிய கம்பியில் சைக்கிள்விடும் 'சாம்பியன்' ஆகிவிடுவதில்லையா? அதுபோலத்தான் குருவம்மாவும்! டீ அடிப்பதில், தீ அடுப்பைக் கண்காணிப்பதில், தின்பண்டங்களைத் துரிதமாக வழங்குவதில் அவள் தன்னேரில்லாமல் விளங்கினாள். குருவம்மாவின் கைகள் எத்தனை வேலைகளைத்தான் செய்யட்டும்—அவள் கண்கள்கூட நிம்மதியாக இருக்கக்கூடாதா? இருள் கவிந்து நூலாடை படிந்த அந்தக் குச்சு வீட்டையே ஏன் துளாவிக்கொண்டிருக்கின்றன? உள்ளேதான்யாருமில்லையே! மாதச் சாப்பாட்டுக்காரர்களுக்கு பெரிய அடுப்பில் அரிசி வெந்துகொண்டிருந்தது. நறுக்கிவைக்கப்பட்டிருந்த காய்கறிகள் ஓலைத்தடுக்கில் குவிந்து கிடந்தன.

"எங்கேபோனா இவ?"—டீ அடித்துக்கொண்டே குருவம்மா பேசினாள். தனக்குள்ளேதான் பேசிக்கொண்டாள்.

"இன்னக்கி சனிக்கிழமெ; சம்பள நாளு; எல்லாம் தெரிஞ்சும் இவ எங்கே போனா?"—குருவம்மா முணகிக்கொண்டே குருவி ரத்தம் போல் சிவந்திருந்த தன் வாயில் சுண்ணாம்பு படிந்திருந்தவிரலை வழித்தாள். பெண்மை அறிந்தவர்களும், தாய்மையை உணர்ங்வர்களும் அப்படிப்பட்ட காட்சிகளைக் கண்டு மயங்கிச் சுருண்டுவிட்டதால்தான் எவ்வளவு நேரமானாலும் குருவம்மாவின் கையாலே போட்ட தேனீரைக் குடிப்பதற்குச் சக்குபாய் டீ ஸ்டாலில் காத்துக்கிடந்தார்களோ!

"சக்கு......!" குருவம்மா கூவி அழைத்தாள் இப்படி.

செப்புக் குடத்தில் தண்ணீர் தளும்ப தேகமெல்லாம் இளமை தளும்ப பல்லுப்போடாத காங்கேயத்துக் கன்றைப்போல் ஒரு பெண் இடுப்பில் குடத்துடன் வந்துகொண்டிருந்தாள்.

குருவம்மா அவளை ஏறிட்டுப் பார்த்தாள்.

"ஏண்டி இவ்வளவுநேரம்? என்று குருவம்மா கேட்டு நிறுத்துவதற்குள் சக்கு அருகில் வந்துவிட்டாள்.

சக்குவின் கண்கள் ஏன் மின்னுகின்றன?

சக்குவை அருகில் பார்த்ததும் குருவம்மா படபடத்துப்போனாள். நாடகத்தில் வரும் பாதர் வெள்ளை வாளை உருவுவதுபோல் அனாயாசமாகக் கையை உயர்த்தி டீக்கோப்பையை ஆற்றும் குருவம்மா திடீரென்று தீச்சுட்டவளைப்போல் துணுக்குற்று டீக்கோப்பைகளை கைதவற விட்டுவிட்டாள்.

"சக்கு, ஏண்டி இப்படி கண்ணைக் கசக்குறே? கேணிக் கரையிலே சண்டைபோட்டுக்கிட்டியா? என்னடி நடந்திச்சு? எவனாவது காலிப்பய கலாட்டா செஞ்சானா? சொல்லுடி!" குருவம்மா வார்த்தைகளை வறுத்துக்கொட்டினாள் அதற்குள்ளாக சக்கு உள்ளே போய்விட்டாள். பின்னாடியே குருவம்மாவும் போனாள்.

"ஏண்டி, வாசல்லே நின்னு கத்திக்கிட்டே இருக்கேனே, பதில் பேசினா என்ன, முத்தா சிந்திப் போகும்?" குருவம்மா எரிச்சலோடு கேட்டாள்.

"எல்லாம் ஒன்னாலேதான்"-சக்குவின் பதில் துப்பாக்கியிலிருந்து தோட்டா வெடித்ததுபோலிருந்தது.

"என்னாலேயா? என்னடி சூச்சம் வச்சுப் பேசறே! பெத்த தாயிட்டே பேசிற பேச்சா இது? ஒடச்சுப் பேசுடி. இப்பவே ஒனக்கு இவ்வளவு இறுக்கமா?" குருவம்மாவின் மனம் கொப்பளித்தது.

சக்கு பதில்பேசவில்லை. குருவம்மாவுக்கு அவளது மௌனம், வெடிப்பதற்காக உப்பும் பலூனைப் போல்பட்டது.

"என்னடி அழுங்குனித்தனமா நிக்கிறே! நானென்ன செஞ்சேனும்!

சொல்லிப்புடு!'' குருவம்மா விடு வாளா? குடைய ஆரம்பித்தாள்.

“ஒன்னும் செய்யாமெத்தான் காலனி பூராப் பேசுருங்களாக்கும்! அணைக்கட்டுலே வேலைபார்க்கும் ஆயிரம் பேருந்தான் பேசுருங்க! கேட்டுப்பாரு!'' சக்கு வாயைத் திறந்தாள். வார்த்தைகள் தேர் நகர் வதைப்போல் திணறின.

“சக்கு!'' — பல்லைக் கடித்தாள் குருவம்மா.எங்கிருந்துதான் அந்தச் சிவப்புவர்ணம் மின்னல் வேகத்தில் வந்ததோ தெரியவில்லை — குருவம் மாவின் கண்கள் செம்பருத்திப் பூக்களைப்போல் சிவந்துவிட்டன. இப்போது அவள் பார்வைக்கு ஒரு தேவதைபோல் இருந்தாள். வாயில் காவிச்சிவப்பு. விழிகளில் கோபச் சிவப்பு. நெற்றியில் குங்குமச்சிவப்பு! பெண்ணொளி எல்லா ஒளிகளிலும் சிறந்த ஒளிதான்! பெண்ணின் முகத்தில் துயிலும் அந்த ஒளியை கோபமோ, கவலைக்குறியோ எதுவும் ஒன்றும் செய்துவிடமுடியாது. நீர் எழுத்துக்களைப்போல் அந்த ஒளி தனித்தே நிற்கும். குருவம்மா எவ்வளவுதான் படபடத்தாலும் அனலைப் பொழிந்தாலும் அவள் முகத்தில் உறைந்திருந்த ஜீவகளை கொஞ்சங்கூட மங்காமல்தான் இருந்தது.

“குருவம்மா, முந்தி கட்டின புருஷனுக்குத் துரோகம் பண்ணினு, இப்ப பெத்த அப்பனுக்கே துரோகம் பண்ருன்னு காலனி பூரா பேசுருங்களே'' என்று ராகம் கூட்டி அழ ஆரம்பித்தாள் சக்கு.

“மூடுடி வாயை! நீஒரு விவஸ்தை கெட்டவ; யரோ சொன்ருங்களாம், இவ அதைக் கேட்டுக்கிட்டு வந்து ஆவர்த்தனம் வாசிக்கிரு; பெத்த தாயைப்பத்தி ஊரிலே என்ன சொன்னுலும் நம்புறதாக்கும்?'' குருவம்மா இந்த இடத்தில் அல்லி ராணியாகிவிட்டாள்.

“சொல்றவுங்க சும்மாவா சொல்ருங்க? வெளக்கமாத்தான் சொல்ருங்க. எங்கேயோ கெடந்த போக்கிரிப் பொன்னையாவைக் கூட்டியாந்து கல்லாப் பெட்டியிலே உக்கார வச்சுக்கிட்டு குருவம்மா கூத்தடிக்கிருன்னு சொல்ருங்க!'' சக்கு புட்டுப் புட்டு வைத்தாள்.

“ஹோ! எவடி பாத்தவ? பசியாமெ சாப்பிட்டா ஏது சோறுன்னு கேப்பாளுக; சாப்பிடாமெ இருந்தா சோத்துக்கு விதியில்லேன்னு தண்டோராப் போடுவாளுக; குருவம்மா கூலிவேலைக்கிப் போகாமெ குந்திக்கிட்டு சாப்பிடுறது அவளுகளுக்கு மனக்காப்பு; அதான் ஆரம்பிச்சுட்டாளுக...'' குருவம்மா கட்டுச் சேவலைப்போல் மூர்கமாகப் பேசினுள்.

“அவளுங்களுக்குத்தான் காப்பு; சரி எனக்காச்சும் உண்மை தெரிய வேண்டாமா?'' நெருப்புத் துண்டுகளைப்போல் சொற்களை தூக்கிப் போட்டாள் சக்கு,

“சக்கு! ஒனக்குத் திமிருஎடுத்துப் போச்சா? சின்னஞ்சிறுசு பேசுற பேச்சா இது! அதையும் சொல்லி வக்கிறேன் கேட்டுக்க; எல்லாம் ஒன்னெப்புடுச்ச சனியன் தொலையிறதுக்குத்தான் அவரைப் புடுச்சு கல்லாவிலெ வச்சேன். போதுமா?'' நறுக்கித் தெறித்தால்போல் சொன்னுள் குருவம்மா.

“என்ன! புரியச் சொன்னுல்ல; என்னைப்புடிச்ச சனியனுக்கும் ஒன்னைத் தொத்திக்கிட்டிருக்கும் கரடிக்கும் என்ன ஒறவு?'' சக்கு துருவினுள்.

“ஏண்டி நீ எனக்கு சக்களத்தியாட்டம் பேசறியே என்ன! மூளை பெரண்டுபோச்சா? இல்லே எவளாவது ஒம் மனசிலே வெனையை வச்சுப்புட்டாளா?''

“அம்மாவ்! நீ பேசுறது ஒனக்கே நல்லா இருந்தாச்சரி; ஊரிலே இப்படியெல்லாம் சொல்ருங்களேன்னு கேட்டா நீபாட்டுக்கு தாண்டிக் குதிக்கிறியே?''

“ஆமாண்டீ, இன்னிக்கு இதைக் கேட்டே, நாளைக்கி இன்னுேன்னைக் கேப்பே, இதுச்கு முடிவு வேண்டாமா?'' — அடித் தொண்டையில் பேசினுள் குருவம்மா.

“அவன் வர்ருன், இவன் சிரிக்கிருன், நீ கல்லாப்பெட்டிகிட்டேயே வரப்புடாது, செந்தூர் பொல்லாதவன், அவன் எதையும் செய்வான், பத்துப்பேருக்குத் தலைவன்கிற கர்வம் — எல்லாம் சொன்னே! இப்ப உம்மேலேயே பழிவந்திடுச்சு! நா அப்பவே நெனைச்சேன்; பொன்னையா ஏன் இங்கே வரணும்; எதுக்காக அவருக்கு இங்கே ஜாகை, சாப்பாடெல்லாம்-எனக்குமுதல்லே புரியலெ, இப்பத்தான் தெரியுது, என்னைக் கெட்டுப்போகப்படாதுன்னே சொன்னே; ஞாயந்தான். நீ மட்டும் கெட்டுப்போகலாமா?''

சக்குவின் குரலில் தழுதழுப்பும் துயரமும் கலந்திருந்தன.

“சக்கு, இந்தாப் பாருடி! நா வாழ்ந்து குட்டிச்சுவராப் போய்ட்டேன். இடிஞ்சுபோன வீட்டுலே எருக்குமுளைச்சா என்ன, ஊமத்தை முளைச்சா என்ன! பேசறவங்களெ என்கிட்டே வந்து பேசச் சொல்லு. எவளாவது பூதியா எதையாவது பேசினு அவ நாக்கிலே சுண்ணும்புக் குறிபோட்டு நறுக்கிப் புடுவேன்னு சொல்லி வையி........ இனிமே நீ கேணிக் கரைக்கும் போகவேண்டாம். அந்த வேலையையும் நானே பாத்துக்கிறேன்.''

குருவம்மா பொரிந்து தள்ளினுள். அணைக்கட்டு சங்கு ஒலித்தது கல்லெறிந்த தேன் கூட்டைப்போல் கூலிகள் சிதறிப் பிரிந்து குடியிருப்புகளுக்கு விரைந்தார்கள்.

தேயிலைத் தூள் வாங்க ஆண்டிபட்டிக்குப் போயிருந்த பொன்னையா அப்போதுதான் சைக்கிளில் வந்து இறங்கினுன்.

“குருவம்மாவின் முகம் கொடுகொடுவென்று இருக்கிறதே, மலைச் சரிவில் இருக்கும் ஒற்றையடிப்

ஏகர் எப்படி வந்தது?

நிலத்தின் அளவு எடுத்து, இத்தனை ஏக்கர் என்று கூறுகிறேமல்லவா? இந்த ஏக்கர் என்ற அளவு முறை எப்படிக் கிடைத்தது என்பதற்கு ஒரு விளக்கம் தரப்படுகிறது.

இங்கிலாந்துமன்னன் முதலாம் எட்வர்டு நிலத்தின் அளவு எடுத்துக் கணக்குப் பாக்க விரும்பினுர்.

எருதுகளைப் பூட்டி நிலத்தில் ஒருநாள் முழுவதும் ஏர் உழச் சொல்லி, ஒரு நாளில் எவ்வளவு அளவு நிலத்தில் ஏர் உழ முடிந்ததோ அதனை அளந்து பார்த்தான்; 4840 சதுரகெஜம் இருந்தது. அதற்கு ஏக்கர் என்று பெயரிட்டானும்.

பாதையைப்போல் சக்குவின் கன்னத்தில் நெளிந்த கண்ணீர்க் கறை தெரிவது ஏன்?'' — பொன்னையாவுக்கு மனம் துருதுருத்தது. நீண்ட பெருமூச்சை வெளிவிட்டான்.

*

வைகை அணைக்கட்டு வேலைக்கான ஆயத்தம் தொடங்கிவிட்டது. மதுரைச் சிறையிலிருந்த தண்டனைக் கைதிகள் உள்பட இரண்டாயிரம் பேர் அதற்கென வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள்.

மதுரை நகரில் புகழோடும் செல்வாக்கோடும் இருந்துவந்த நாகுக் கொத்தனர் அணைக்கட்டு வேலைகளுக்காக திறமை மிக்க நூறு கொத்தனர்களைப் பொறுக்கி எடுத்து அனுப்பிவைத்தார்! அவர்களில் மிக முக்கியமானவன் செண்பகஞ்சேர்வை. இப்போதுள்ளது போல் பதினைந்தாண்டுகளுக்குமுன்னர் அன்றைய கொத்தனர்கள் வாய்ப்பு வசதிகளைப் பெற்றிருக்கவில்லை. எந்தக் கொத்தனருக்கும் சொந்தவீடு கிடையாது. ஒவ்வொரு கொத்தனரும் சாந்துச்சட்டியையும் பூச்சுக் கரண்டியையும் கையில் வைத்துக்கொண்டு மதுரை மேலக் கோபுர வாசலில் நிற்பார்கள். தேவைப்பட்டவர்கள் அவர்களைக் கூட்டிக்கொண்டுபோவார்கள் இதுதான் அந்தக் காலத்து மதுரைக் கொத்து வேலைக்காரர்களின் வாழ்க்கை நிலை.

செண்பகஞ் சேர்வை சிறந்த கொத்து வேலைக்காரர்தான். ஒரு காலத்தில் சித்திரைத் தேர், வண்டியூர் தெப்பம் எல்லாம்கூட அவனது சிங்கார வேலைப்பாடுகளுடன்தான் உலா வந்திருக்கின்றன. ஆனால் பிற்காலத்தில் அவன் உள்ளச் சோர்வால் விரக்தியடைந்துவிட்டான்.

அணையில் சேர்வைக்கு தினக் கூலி மூன்று ரூபாய் என்று முடிவானது. நிரந்தரமாக ஒரு வேலை கிடைத்ததில் அவனுக்கு மனச் சாந்தி ஏற்பட்டிருந்தது உண்மைதான். ஆனால் அந்தச் சாந்தி அவனது இதயம் முழுதும் வியாபித்திருக்கவில்லை. இருளை அகற்றிட ஊதுபத்தி வெளிச்சம் உதவுமா?

குருவம்மாவையும், சக்குவையும் தனிமையில் வைத்துவிட்டு எப்படி அணைக்கட்டு வேலைககுப் போவது என்ற கவலைதான் சேர்வையின உள்ளத்தில் மேலோங்கி நின்றது. எல்லாம் அங்கையர்க் கண்ணி கிருபைதான் என்று ஒரு வழியாக மதுரைமீனுட்சியம்மனின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு செணபகஞ் சேர்வை அணைக்குப் போகத் தயாரானன். மகளிடமும் பேததியிடமும விடைபெறும்போது அவன் கண்கள் கலககிவிட்டன.

தாயை விட்டுப் பிரியும் சிறுவர், சிறுமியரைப்போல், செணபகஞ் சேர்வை குருவம்மாவையும், சக்குவையும் விட்டுப் பிரியும்போதுதேம்பித் தேம்பி அழுதான். வாழக்கையில் மனிதனது ஒவ்வொரு குணத்திற்கும் பருவம், காலவரம்பு இருந்தாலும் பாச உணர்ச்சிக்கு மட்டும் அந்த காலக் கெடு இல்லை. இருந்திருந்தால் முன் கோபத்திற்கு இளமைப்பருவம், முடி நரைப்பதற்கு முதுமைப் பருவம் என்று சென்ன மானிட இயல் அறிவாளர்கள மனிதனது ரத்த பாச உணர்ச்சி அற்றுப போவதற்கான பருவத்தையும் சொல்லியிருப்பார்களே!

காஞ்சி

ஆண்டு மலர் 1965.

தூலைத் திங்களில் வருகிறது.

*

எழுத்தாளர் பலர் தீட்டிடும்
கருத்தோவியங்கள்,

தீஞ்சுவைக் கவிதைகள்,
தித்திக்கும் சிறு கதைகள்.

●

இவற்ரேடு

அண்ணு

அளித்திடும்
சிந்தனை விருந்துகள்
கொண்ட

தேலில் தோய்த்த பலாச்சுளையாக
மலர் தயாராகிறது.

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணாதுரை.